வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 212/2022

வழக்கு சாட்சி- **அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | துளசி | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பழனிமாணிக்கம் | : | தொழில் | மெக்கானிக் |
| கிராமம் | திருக்காட்டுப்பள்ளி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 35/2024 |

(1ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 வது எதிரி ஆஜர்)

**<u>நாள் : 24.04.2024</u>**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மெக்கானிக்காக வேலை செய்து வருகின்றேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து எ ன்னுடையது. 2 வது கையெழுத்து பாலையன் என்பவருடையது. மேற்படி கையெழுத்தை போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் செய்தேன். இவ்வழக்கு குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது. (**பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.2/அ.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 05.08.2022 ஆம் தேதி அன்று 11.30 மணி அளவில் நானும், பாலையன் என்பவரும் சம்பவ இடத்தில் நின்று பேசி கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது திருக்காட்டுப்பள்ளி காவல்நிலையத்தை சேர்ந்தவர்கள் எங்கள் முன்பாக சம்பவ இடத்தை பற்றிய ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள்

அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து, எதிரிக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**